# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 100 /பேரூ/2025**
**நாள் : 24 .04.2026**

P. மூர்த்தி,
பல்லடம்,
திருப்பூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கண்ணம்பாளையம் சிறப்பு நிலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் வழி, இச்சிப்பட்டி அஞ்சல், 1/88, தேவராயன்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. மூர்த்தி என்பவரது 10.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2025 அன்று பெறப்பட்டு, 100/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் வழி, இச்சிப்பட்டி அஞ்சல், 1/88, தேவராயன்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. P. மூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 10.02.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சிப் பகுதியின் மேற்கண்ட கிராமம், புல எண்கள் முறையே 123 மற்றும் 124ல் ஸ்பிரிங் ஃபீல்டு என்ற பெயரில் அமையப் பெற்றுள்ள மனைப்பிரிவிலுள்ள EWS மனைகளை தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019க்கு முரணாக சட்டவிரோத ஒருங்கிணைத்து கட்டுமானங்கள் உருவாக்கியிருப்பது குறித்து கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு 24.08.2023 அன்று புகார் செய்து, மேற்கண்ட சட்ட விரோத கட்டுமானங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை வைத்து, ஒரு வருடம் கடந்தும் கூட, மேற்கண்ட சட்டவிரோத கட்டுமானங்கள் மீது யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாத மேற்கண்ட கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி, 20.07.2024ல் பேரூராட்சிகள் உதவி இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை ஆகிய அரசின் மேலமைப்புகளுக்கு புகார் செய்து மாதங்கள் ஆறு கடந்தும், மேற்கண்ட புகார் மனுக்கள் மீது கடந்த ஒன்றரையாண்டு காலமாக நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல், அரசு

பணியை சரிவர செய்யாமல் பேரூராட்சிக்கு பெருமளவிலான இழப்புகளை ஏற்படுத்தும் வகையில் மெத்தனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்,

பேரூராட்சிக்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தும் வகையில் சட்ட விரோதமாக உருவாக்கப்பட்டுள்ள மேற்கண்ட கட்டுமானங்கள் மீது, (HUD (UD4(1) அரசாணை நிலை எண். 195, நாள் 05.11.2022ல் வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய உத்தரவுகள் வழங்கிட ஆவன செய்ய வேண்டுமாய் கோரி, இப்புகார் மனுவை தங்களிடம் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது 10.02.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு முகவரியிட்ட 24.08.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காக மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள E.W.S மனைகளை ஒருங்கிணைக்கவோ, உட்பிரிவு செய்யவோ, மாற்றியமைக்கவோ கூடாது என்ற " நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 18 நாள் 04.02.2019 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் (TNCDBR) 47 (9) என்ற உத்தரவுக்கு முரணாக கண்ணம்பாளையம் பேரூராட்சி பகுதியில் க.ச.எண். 123/1A (மற்றும்) 124/2ல் அமைந்துள்ள ஸ்பிரிங் பீல்டு (G. Square) என்ற மனைப்பிரிவிலுள்ள 186, 187 என எண்களிடப்பட்டுள்ள E.W.S. மனைகளையும் (பாலசுப்பிரமணியம்) 152, 155, 156, என எண்களிடப்பட்டுள்ள E.W.S. மனைகளையும் (இளங்கோவன்) 168,169,173,174 என எண்களிடப்பட்டுள்ள E.W.S. மனைகளையும் (சுமதி) ஒருங்கிணைத்து கட்டிட அனுமதி வழங்கியிருப்பது சட்டவிரோதமானதாகையால்,

தாங்கள் புலத்தணிக்கை மேற்கொண்டு, மேற்கண்ட E.W.S. மனைகளை ஒருங்கிணைத்து வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதியினை ரத்து செய்யுமாறும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (U.D. 4(1) G.O. (MS.) No.07 நாள் 10.01.2023 என்ற அரசாணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் பேரில் மேற்கண்ட சட்டவிரோத கட்டுமானங்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேற்கண்ட கட்டுமானங்களுக்கு வரிவிதிப்புகள் ஏதும் மேற்கொள்ளக்கூடாது எனவும், கோரி இப்புகார் மனுவை தங்களிடம் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.04.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.10.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 343/2024/-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திரு. பி.மூர்த்தி என்பவரிடமிருந்து வரப்பெற்ற 20.07.2024 நாளிட்ட புகார் மனுவில், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காக மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள E.W.S. மனைகளை ஒருங்கிணைக்கவோ, உட்பிரிவு செய்யவோ, மாற்றியமைக்கவோ கூடாது என்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 18, நாள் 04.02.2019 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் (TNCDBR) 47 (9) என்ற உத்தரவுக்கு முரணாக கண்ணம்பாளையம் பேரூராட்சி பகுதியில் க.ச.எண். 123/1A மற்றும் 124/2ல் அமைந்துள்ள ஸ்பிரிங் பீல்ட் (ஜிஸ்கொயர்) என்ற மனைப்பிரிவிலுள்ள 186,187 என எண்ணிடப்பட்டுள்ள E.W.S. மனைகளையும் (பாலசுப்பிரமணியன்) 152,156,155 என

எண்களிடப்பட்டுள்ள E.W.S. மனைகளையும (இளங்கோவன்) 168,169,173,174 என எண்ணிடப்பட்டுள்ள E.W.S. மனைகளையும் (சுமதி) ஒருங்கிணைத்து கட்டிட அனுமதி வழங்கியிருப்பது சட்டவிரோதமானதாகையால்,

தாங்கள் புலத்தணிக்கை மேற்கொண்டு, மேற்கண்ட E.W.S. மனைகளை ஒருங்கிணைத்து வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதியினை ரத்து செய்யுமாறும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (U.D.4(1) G.O.(Ms.) No.07, நாள் 10.01.2023 என்ற அரசாணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் பேரில் மேற்கண்ட சட்டவிரோத கட்டுமானங்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 343/2024 நாள் 22.08.2024, கடித எண். 343/2024 நாள் 04.10.2024 மற்றும் கடித ந.க.எண். 343/2024 நாள் 15.04.2025ல் சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு E.W.S. மனைகள் ஒன்றாக இணைத்து பேரூராட்சியில் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு முரணாக கட்டிடம் கட்டப்பட்டு வருவதாக தெரிவித்து புகார் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்காணும் கடிதம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் விளக்கம் அளிக்க தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில், கட்டிடத்தினை மாற்றி அமைக்க ஆறு மாத கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளுக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது பேரூராட்சி அலுவலகம் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. P. மூர்த்தி மற்றும் எதிர்மனுதாரரான கண்ணம்பாளையம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 10.03.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. எதிர்மனுதாரரான கண்ணம்பாளையம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 26.02.2026 நாளிட்ட கடிதத்தில் தனது சொந்த அலுவல் காரணமாக 10.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாது எனவும், விசாரணையை மற்றொரு நாளில் மாற்றம் செய்திடுமாறு வேண்டி கேட்டுக் கொண்டார்.

6. எதிர்மனுதாரரான கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கையை ஏற்று மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. மனுதாரரான திரு. P. மூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 123/1A மற்றும் 124/2ல் ஸ்பிரிங் பீல்ட் என்ற மனைப்பிரிவில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 186,187 என எண்ணிட்ட EWS மனைகளையும் (பாலசுப்பிரமணியம்) 152,156,155 என எண்களிடப்பட்டுள்ள EWS மனைகளையும் (இளங்கோவன்) 167,168,169,173,174,175 என எண்களிடப்பட்டுள்ள EWS மனைகளையும் (சுமதி) அரசாணை (நிலை) எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.12.2019

மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகளுக்கு புறம்பாக ஒருங்கிணைத்து அமைத்து முறைகேடாக பேரூராட்சியால் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- ➢ எனவே விதிமீறி சட்ட விரோதமாக கட்டப்பட்ட மேற்கண்ட கட்டுமானங்கள் மீது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை (நிலை) எண். 195 நாள் 05.11.2022ல் வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் விதிமீறி கட்டப்பட்ட கட்டுமானங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளாத பேரூராட்சி செயல் அலுவலர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரரான கண்ணம்பாளையம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 13.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ➢ ''மனுதாரர் திரு. P. மூர்த்தி என்பவர் புகாராக தெரிவிக்கும் கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 123/1A மற்றும் 124/2ல் ஜிஸ்கொயர் ஸ்பிரிங் பீல்டு மனைப்பிரிவில் உள்ள EWS மனை எண். 186, 187 (பாலசுப்பிரமணியம்), மனை எண். 152,155,156 (இளங்கோவன்) மற்றும் மனை EWS மனைகள் எண். 168,169,173,174 (சுமதி) ஆகியவை ஒன்றாக இணைத்து பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதிக்கு முரணாக கட்டிய கட்டட உரிமையாளருக்கு 7 தினங்களுக்குள் விளக்கம் அளிக்க கோரப்பட்டது.
- ➢ கட்டட உரிமையாளர்கள் கட்டடத்தினை மாற்றி அமைக்க கோரிய 6 மாத காலம் அவகாசம் முடிவுற்றது.
- ➢ இருப்பினும், இது தொடர்பாக பேரூராட்சியில் அரசாணை (நிலை) எண். 195, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 05.11.2022ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''.

9. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. P. மூர்த்தி என்பவர் தனது புகார் மனுவில் கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 123/1A மற்றும் 124/2ல் ஸ்பிரிங் பீல்ட் என்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள 186,187 என எண்ணிட்ட EWS மனைகளையும் (பாலசுப்பிரமணியம்) 152,156,155 என எண்களிடப்பட்டுள்ள EWS மனைகளையும் (இளங்கோவன்) 168,169,173,174 என எண்களிடப்பட்டுள்ள மனைகளையும் (சுமதி) அரசாணை (நிலை) எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகளுக்கு புறம்பாக ஒருங்கிணைந்து அமைத்து முறைகேடாக பேரூராட்சியால் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என புகார் தெரிவித்து, விதிமீறி சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டுமானங்கள் மீது உரிய நடவடிக்கை

மேற்கொள்ளவும் மற்றும் இதற்கு காரணமான பேரூராட்சி செயல் அலுவலர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

மேற்காணும் புகார் குறித்து ஏற்கனவே மனுதாரரால் 20.07.2024 நாளிட்ட மனு கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சியில் பெறப்பட்டதை தொடர்ந்து பேரூராட்சி செயல் அலுவலர் 22.08.2024, 04.10.2024 மற்றும் 15.04.2025 நாளிட்ட கடிதங்களின் மூலம் கட்டட உரிமையாளர்களிடம் உரிய விளக்கம் அளிக்குமாறு செயல் அலுவலர் அறிவுறுத்தியுள்ளார் என்பதையும் அதற்கு கட்டட உரிமையாளர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் கட்டடத்தினை மாற்றி அமைக்க 6 மாத கால அவகாசம் கோரப்பட்டுள்ளது என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இந்நிலையில் கட்டட உரிமையாளர்கள் கட்டடத்தினை மாற்றியமைக்கக் கோரிய 6 மாத கால அவகாசம் முடிவுற்றதால், இது தொடர்பாக அரசாணை (நிலை) எண். 195, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 05.11.2022ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும் மற்றும் அனுமதியற்ற கட்டடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் வழங்கியுள்ள ஆணைகளில் உள்ள வழிகாட்டுதலின்படியும் உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்துமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. P. மூர்த்தி,
1/88, தேவராயன்பாளையம், இச்சிப்பட்டி அஞ்சல், சோமனூர் வழி,
பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம் - 641 668.

2. செயல் அலுவலர்,
கண்ணம்பாளையம் சிறப்புநிலை பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer),(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர் 28/4/26